# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1758/19 - 2012 මැයි 15 වැනි අඟහරුවාදා - 2012.05.15

*1758/ 19 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச.வ.- பீ. 7/2001.*

**1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டம்**

*1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் வெளிநாட்டலுவல்கள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்,
வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2012, மே 13.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2012 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படுதல் வேண்டும்.

2. பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கும், குறிப்பாகப் பயங்கரவாதத்துக்கு நிதியளிப்பதற்கெதிரான எதிர்ப்பு நடவடிக்கைகளை எடுப்பதற்கும் என, பரந்தளவினவான செயல்நுணுக்கங்களை எடுத்துக்கூறுகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைத் தீர்மானம் 1373 (2001 ஆம் ஆண்டு), பயங்கரவாதத்தை ஒடுக்குவதனை இலக்காகக்கொண்ட கடப்பாட்டுத் தொடரை ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளின் மீது சுமத்துகின்றது. ஐக்கிய நாடுகள் சபையினது பட்டயத்தின் VII ஆம் அத்தியாயத்தின் கீழ் செயலாற்றி ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவை, 2001, செத்தெம்பர் 28 ஆந் திகதியன்று இத்தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. இவ்வொழுங்குவிதிகளின் குறிக்கோள் என்னவெனில், இலங்கையினுள் இத்தீர்மானத்தினது 1 ஆம் உறுப்புரையின் (இ) மற்றும் (ஈ) என்னும் பந்திகளை மேலும் குறிப்பாகச் செயற்படுத்துவதனை வசதிப்படுத்தலும், அதன் மூலம் மேற்கூறப்பட்ட கடப்பாடுகளுடன் இணங்கியொழுகுவதற்கான வழிவகையாகவிருத்தலும் ஆகும்.

3. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காகத் தகுதிவாய்ந்த அதிகாரியொருவர் இருத்தல் வேண்டும் ; அவர் பாதுகாப்பு என்னும் விடயம் எந்த அமைச்சருக்குக் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

*4. (1)* அமைச்சர், தகுதிவாய்ந்த அதிகாரியின் விதப்புரையின் மேல், காலத்துக்குக்காலம், இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, ஒன்றில் அவரது சொந்த முயற்சியின் மீது அல்லது ஒரு வெளிநாட்டு அரசின் வேண்டுகோளின் மேல் –

(அ) இவ்வொழுங்குவிதிகளின் கருத்துக்குட்பட பயங்கரவாதச் செயல்களைப் புரிகின்றனர் அல்லது புரிவதற்கு எத்தனிக்கின்றனர், அவற்றில் பங்குபற்றுகின்றனர் அல்லது அவற்றைப் புரிவதற்கு வசதியளிக்கின்றனர் என நம்புவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி நியாயமான ஒதுக்கங்களைக் கொண்டுள்ள இயற்கை ஆட்களை ;

(ஆ) இவ்வொழுங்குவிதிகளின் கருத்துக்குட்பட பயங்கரவாதச் செயல்களைப் புரிகின்றனர் அல்லது புரிகின்றன அல்லது புரிவதற்கு எத்தனிக்கின்றனர், அல்லது புரிவதற்கு எத்தனிக்கின்றன. அவற்றில் பங்குபற்றுகின்றனர் அல்லது பங்குபற்றுகின்றன அல்லது அவற்றைப் புரிவதற்கு வசதியளிக்கின்றனர் அல்லது புரிவதற்கு வசதியளிக்கின்றன என நம்புவதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி நியாயமான ஏதுக்களைக் கொண்டுள்ள சட்ட ஆட்களை, குழுவினரை அல்லது உருவகங்களை ;

(இ) மேலே (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயற்கை அல்லது சட்ட ஆட்களினால், குழுவினரினால் அல்லது உருவகங்களினால் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட சட்ட ஆட்களை, குழுவினரை அல்லது உருவகங்களை, அத்துடன்

(ஈ) மேலே (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இயற்கை அல்லது சட்ட ஆட்களின், குழுவினரின் அல்லது உருவகங்களின் சார்பில் அல்லது அவர்களின் அல்லது அவற்றின் பணிப்பின் மீது செயலாற்றுகின்ற இயற்கை மற்றும் சட்ட ஆட்களை, குழுவினரை அல்லது உருவகங்களை .

பெயர் குறித்தல் வேண்டும்.

*(2)* ஆட்களை, சட்ட ஆட்களை, குழுவினரை அல்லது உருவகங்களைப் பெயர் குறிப்பதன்மேல், தகுதிவாய்ந்த அதிகாரி, (இதனகத்துப்பின்னர் "நிரல்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பெயர் குறிக்கப்பட்ட எல்லா ஆட்களும் பற்றிய நிரலொன்றைத் தொகுத்தல் வேண்டும். தகுதிவாய்ந்த அதிகாரி, அந்நிரலை உடனடியாகக் வர்த்தமானியில் வெளியிடுவித்தல் வேண்டும். அந்நிரலானது, அது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டும்.

*(3)* தகுதிவாய்ந்த அதிகாரி, இதனகத்துப்பின்னர் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க, பந்தி *(2)* இன் நியதிகளின்படி தொகுக்கப்பட்ட நிரலை மீளாய்வு செய்தலும் திருத்துதலும் வேண்டும்.

*(4)* அமைச்சரினாலான பெயர்குறித்தலொன்று, தொடர்புபட்ட ஆட்களுக்கு, குழுவினருக்கு மற்றும் உருவகங்களுக்கு எதிராக முடிவுறாதுள்ளவொரு குற்றவியல் புலனாய்வு அல்லது வழக்கு நடவடிக்கைகள் இருக்கின்றமையைப் பொருட்படுத்தாது, அத்தகைய தொடர்புபட்ட ஆட்கள், குழுவினர் என்போர் தொடர்பிலும் மற்றும் உருவகங்கள் தொடர்பிலும் ஏதேனும் இயைபான மூலத்திலிருந்தான திட்டவட்டமான தகவலின் அல்லது விடயத்தின் அடிப்படையின் மீதாதல் வேண்டும்.

*(5)* அமைச்சரினால் பெயர்குறிக்கப்படுகின்ற இயற்கை அல்லது சட்ட ஆட்களின், குழுவினரின் அல்லது உருவகங்களின் பெயர்கள், அத்தகைய இயற்கை அல்லது சட்ட ஆட்களை குழுவினரை அல்லது உருவகங்களைப் பயனுள்ள வகையிலும் செம்மையாகவும் ஆளடையாளங்காண்பதனை அனுமதிப்பதற்குப் போதிய விவரங்கள் இணைக்கப்பட்டவனவாகவிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் தகுதிவாய்ந்த அதிகாரி எடுத்தல் வேண்டும்.

*(6)* தகுதிவாய்ந்த அதிகாரி, அத்தகைய பெயர்களை நிரலில் தொடர்ந்து வைத்திருப்பதற்கான ஏதுக்கள் உள்ளனவென்பதை உறுதிப்படுத்துவதற்காக *(2)* ஆம் பந்தியின் நியதிகளின்படி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நிரலைக் கிரமமான கால இடைவெளிகளிலும் ஆகக்குறைந்தது ஒவ்வோராண்டும் ஒரு தடவையேனும் மீளாய்வு செய்வித்தல் வேண்டும்.

*(7)* நிரலில் ஏதேனும் பெயரை அல்லது எவையேனும் பெயர்களைச் சேர்ப்பதற்கான அல்லது அதிலிருந்து அகற்றுவதற்கான தேவையுள்ளவிடத்து, வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள அந்நிரலுக்கான திருத்தம் என்றவகையாக அது செய்யப்படுதல் வேண்டும். அத்தகைய திருத்தம் ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

*(8)* ஆளெவரும், பெயர்குறித்தலுக்கு முன்னர் எந்நேரத்திலும், எவரேனும் ஆள், குழுவினர் அல்லது ஏதேனும் உருவகம் பெயர்குறிக்கப்படுவதற்குக் கவனத்திட் கொள்ளப்படுகின்றார் அல்லது கவனத்திட் கொள்ளப்படுகின்றது. அல்லது பெயர் குறிக்கப்படுகின்றார் அல்லது பெயர் குறிக்கப்படுகின்றது என அத்தகைய ஆளுக்கு, குழுவினருக்கு அல்லது உருவகத்துக்கு அறிவித்தல் வழங்குதலாகாது.

5. (1) இவ்வொழுங்குவிதிகளின் 4 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி பெயர் குறிக்கப்படுவதன்மேல், தகுதிவாய்ந்த அதிகாரி, அதற்கென ஆக்கப்படும் கட்டளையொன்றின் மூலம், ஓர் இயற்கை அல்லது சட்ட ஆளுக்கு, குழுவினருக்கு அல்லது உருவகத்துக்குரிய அல்லது அவருக்கு அல்லது அதற்குச் சொந்தமான அல்லது அவரினால் அல்லது அதனால் வைத்திருக்கப்பட்ட எல்லா நிதிகளையும், ஏனைய நிதிசார் சொத்துக்களையும், பொருளாதார மூலவளங்களையும் உடனடியாக முடக்குதல் வேண்டும். அத்தகைய ஆள், குழுவினர் அல்லது உருவகம் பெயர் குறிக்கப்பட்டுள்ளவரை, நிதிகள், ஏனைய நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பன முடக்கப்பட்டனவாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(2) (அ) ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகள் 4 ஆம் ஒழுங்குவிதியின் நியதிகளின்படி பெயர் குறிக்கப்பட்ட ஓர் இயற்கை அல்லது சட்ட ஆளுக்கு, குழுவினருக்கு அல்லது உருவகத்துக்கு. அல்லது அவர்களின் அல்லது அதன் நன்மைக்காக எவையேனும் நிதிகளை, ஏனைய நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார மூலவளங்களை அத்துடன் நிதிசார் அல்லது வேறு தொடர்புபட்ட சேவைகளை, நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கிடைக்கக்கூடியனவாக்குதலாகாது ;

(ஆ) ஆளெவரும், பெயர்குறிக்கப்பட்ட ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் நிதிகளை, ஏனைய நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார மூலவளங்களைக் கிடைக்கக்கூடியனவல்லாததாக்குவதற்கு அவசியமானவாறான அத்தகைய நடவடிக்கைகளை எடுக்க முன்னர் அல்லது நிதிசார் அல்லது வேறு தொடர்புபட்ட சேவைகளை வழங்குவதற்கு மறுக்கு முன்னர் எந்நேரத்திலும் அவரது அல்லது அதன் நிதிகள், நிதிசார் சொத்துக்கள் பொருளாதார மூலவளங்கள் மற்றும் வேறு தொடர்புபட்ட சேவைகள் கிடைக்கக்கூடியனவல்லாததாக்கப்படுகின்றனவெனப் பெயர் குறிக்கப்பட்ட ஆளுக்கு, குழுவினருக்கு அல்லது உருவகத்துக்கு அறிவித்தலாகாது.

(3) ஆளெவரும், (1) ஆம் பந்தியின் நியதிகளின்படி பெயர்குறித்தலுக்கு முன்னர் அல்லது முடக்குதற் கட்டளையொன்றை ஆக்குவதற்குமுன்னர் எக்கட்டத்திலும், அதன்மூலம் ஓர் ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் நிதிகள், ஏனைய நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பவற்றுக்கான அணுகுகை அதன்மேல் தடைசெய்யப்படுவதாகும் அத்தகைய நிதிகள், ஏனைய நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பவற்றின் மீது முடக்குதற் கட்டளையொன்று விதிக்கப்படலாமென அத்தகைய ஆளுக்கு, குழுவினருக்கு அல்லது உருவகத்துக்கு அறிவித்தலோ அல்லது அறிவித்தல் கொடுக்கப்படுவதனை அனுமதித்தலோ அல்லது செய்வித்தலோ ஆகாது :

ஆயின், எவ்வாறாயினும், தகுதிவாய்ந்த அதிகாரி, அத்தகயை நிதிகள், ஏனைய நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள் என்பன முடக்கப்பட்டதன்மேல் அத்தகைய ஆளுக்கு, குழுவினருக்கு அல்லது உருவகத்துக்கு அறிவித்தல் கொடுக்கப்படுவதனைச் செய்வித்தல் வேண்டும்.

(4) முடக்குதற் கட்டளையொன்றின் பயன், விடயமுகாமை உட்பட, நிதிகளின் அளவு, தொகை, அவை வைத்திருக்கப்படும் இடம், அவற்றின் சொத்தாண்மை, உடைமை, இயல்பு, சேரிடம் என்பவற்றிலான ஏதேனும் மாற்றத்தை, அல்லது நிதிகள் பயன்படுத்தப்படுவதனை அல்லது கையாளப்படுவதனை இயலச் செய்யும் வேறு மாற்றத்தை விளைவிக்கக்கூடிய ஏதேனும் வழியில் அவற்றின் ஏதேனும் அசைவை, கைமாற்றத்தை, மாற்றத்தை, பயன்பாட்டை அல்லது கையாளுகையைத் தடைசெய்வதாதல் வேண்டும்.

ஆயின், அத்தகைய தடை, முடக்கப்பட்டவொரு கணக்கின் மீது வருமதியாகவுள்ள வட்டி அல்லது வேறு ஈட்டுகைகள், அல்லது அக்கணக்கு முடக்கப்பட்ட கணக்கொன்றாக வருமுன்னர் செய்துமுடிக்கப்பட்ட அல்லது எழுந்த ஒப்பந்தங்கள். உடன்படிக்கைகள் அல்லது கடப்பாடுகள் என்பவற்றின் கீழ் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகள், அல்லது மூன்றாந்திறத்தவரொருவரினால் அக்கணக்குக் கைமாற்றப்பட்ட நிதிகள், வரவுவைக்கப்பட்ட அந்நிதிகளும் முடக்கப்பட்டனவாக இருக்கும்வரை அத்தகைய கணக்குக்கு வரவு வைக்கப்படுவதற்கு ஏற்புடையதாதலாகாது.

6. (1) தகுதிவாய்ந்த அதிகாரி, இவ்வொழுங்குவிதிளின் ஏற்பாடுளுக்கிணங்க, பின்வருவனவற்றை அனுமதிப்பதற்கு, பயங்கரவாதச் செயல்களுக்கு நிதியளித்தலைத் தடுப்பதற்கென அவர் தோதானவையெனக் கருதுகின்றவாறான அத்தகைய நிபந்தனைகளின் கீழ், குறித்த அதிகாரவளிப்பொன்றை வழங்கலாம் :-

(அ) குறிப்பாக, உணவுப்பொருட்கள், மருந்துகள், குடும்ப வதிவிடத்துக்கான வாடகை அல்லது ஈடு மற்றும் அக்குடும்பவுறுப்பினர்களின் மருத்துவச் சிகிச்சை தொடர்பான கட்டணங்களும் விதிப்பனவுகளும் என்பன உட்பட, 4 ஆம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட நிரலில் சேர்க்கப்பட்ட ஓர் இயற்கை ஆளின் அல்லது அவரது குடும்ப உறுப்பினர் ஒருவரின் அத்தியாவசியமான மனிதத் தேவைகளுக்காக, முடக்கப்பட்ட நிதிகளைப் பயன்படுத்துதல் அல்லது ஏனைய சொத்துக்களை வழங்குதல் ;

(ஆ) பின்வரும் நோக்கங்களுக்காக முடக்கப்பட்ட கணக்குகளிலிருந்து கொடுப்பனவுகளைச் செய்தல் அல்லது ஏனைய சொத்துக்களை வழங்குதல் ;

(i) வரிகள், கட்டாயக் காப்புறுதிக் கட்டுப்பணங்கள் மற்றும் வாயு, நீர், மின்சாரம் தொலைத்தொடர்புகள் போன்ற பொதுப் பயன்பாட்டுச் சேவைகளுக்கான கட்டணங்கள் என்பவற்றைக் கொடுப்பனவு செய்தல் ;

(ii) கணக்குகளைப் பேணுவதற்காக ஒரு நிதி நிறுவனத்துக்கு வருமதியாகவுள்ள விதிப்பனவுகளைக் கொடுப்பனவு செய்தல் ;

(iii) சட்டக் கட்டணங்களுக்கான அல்லது அவசரச் செலவுகளுக்கான கொடுப்பனவுகளைச் செய்தல்.

(2) முடக்குதற் கட்டளையொன்றுக்கு அமைந்தனவாகவுள்ள நிதிகளை அணுகுவதற்கான அதிகாரவளிப்பொன்றுக்கான வேண்டுகோள் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு எழுத்தில் செய்யப்படுதல் வேண்டும்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி, அதிகாரவளிப்புக்கான வேண்டுகோளொன்று கிடைக்கப்பெற்றதன்மேல், அதிகாரவளிப்புக்கான வேண்டுகோளை அனுமதிப்பதற்கு அல்லது நிராகரிப்பதற்குத் தகுதிவாய்ந்த அதிகாரி உட்கருதுகின்றாரா அல்லாராவென்பதை அவ்வேண்டுகோளை விடுக்கும் ஆளுக்கு, அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப்பெற்றதிலிருந்து முப்பது நாட்களினுள் எழுத்தில் அறிவித்தல் வேண்டும். அவ்வேண்டுகோள் அனுமதிக்கப்படுமிடத்து, தகுதிவாய்ந்த அதிகாரி, பயங்கரவாதச் செயல்களுக்கு நிதியளித்தலைத் தடுப்பதற்கு அவசியமெனத் தகுதிவாய்ந்த அதிகாரி கருதுகின்ற நிபந்தனைகளாவுள்ளவையும், அதிகாரவளிப்பு எந்த நிபந்தனைகளுக்கமைய அவ்வாறு வழங்கப்படுகின்றதோ அந்த நிபந்தனைகளாகவுள்ளவையுமான நிபந்தனைகளை எடுத்துக்கூறுதல் வேண்டும்.

(4) தகுதிவாய்ந்த அதிகாரி, ஒவ்வொரு விடயத்தினதும் சூழ்நிலைகளைப் பொறுத்து, அதிகாரவளிப்பொன்றை எந்நேரத்திலும் வேறுபடுத்தலாம் அல்லது இல்லாதொழிக்கலாம்.

7. (1) அமைச்சர் எவரேனும் இயற்கை அல்லது சட்ட ஆளை, குழுவினரை அல்லது உருவகத்தைப் பெயர் குறித்துள்ளவிடத்தும், அத்தகைய இயற்கை அல்லது சட்ட ஆள், குழுவினர் அல்லது உருவகம் பற்றிய நிரலொன்று வர்த்தமானியில் வெளியிடப்படுமிடத்தும், தகுதிவாய்ந்த அதிகாரி, அத்தகைய பெயர்குறித்தல் பற்றி அத்தகைய இயற்கை அல்லது சட்ட ஆளுக்கு, குழுவினருக்கு அல்லது உருவகத்துக்கு எழுத்தில் அறிவிப்பதற்கு நியாயமான எல்லா நடவடிக்கைளையும் எடுத்தல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதிகளின் நியதிகளின்படி அத்தகைய இயற்கை அல்லது சட்ட ஆளை, குழுவினரை அல்லது உருவகத்தைப் பெயர்குறிப்பதற்கான காரணங்கள், நிரலிலிருந்து அகற்குவதற்கான நடவடிக்கைமுறைகள் மற்றும் எந்த நடவடிக்கைமுறைகள் மூலம் இயற்கை அல்லது சட்ட ஆள், குழுவினர் அல்லது உருவகம் பெயர்குறித்தலை எதிர்க்கமுடியுமோ அந்த நடவடிக்கைமுறைகள் என்பன தொடர்பான தகவலை எழுத்திலான அறிவித்தல் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) எழுத்திலான அறிவித்தலானது–

(அ) ஓர் இயற்கை ஆளின் விடயத்தில், அத்தகைய ஆளின் கடைசியாக அறியப்பட்ட முகவரிக்கு அஞ்சலிலிடுவதன்மூலம் ; அல்லது

(ஆ) ஒரு சட்ட ஆளின் அல்லது உருவகத்தின் விடயத்தில், இலங்கையினுள்ளான அதன் பதிவு செய்யப்பட்ட அல்லது பிரதான அலுவலகத்துக்கு அல்லது பதிவு செய்யப்பட்ட அல்லது பிரதான அலுவலகமொன்று இல்லாதவிடத்து அதன் கடைசியாக அறியப்பட்ட முகவரிக்கு அஞ்சலிடுவதன்மூலம் ; அல்லது

(இ) ஒரு குழுவினரின் விடயத்தில், பதிவஞ்சல் மூலம், நேரடியாக ஒப்படைப்பதன்மூலம் அல்லது இயன்றனவாகவுள்ள எத்தகையனவுமான வழிவகைகள் மூலம்

அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், (1) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள், குழுவினர் அல்லது உருவகம், விடயத்துக்கேற்ப, இலங்கைக்கு வெளியே வாழுரிமை கொண்டிருந்தால் அல்லது அமைந்திருந்தால், தகுதிவாய்ந்த அதிகாரி, அவ்வாள், அக்குழுவினர் அல்லது அவ்வுருவகம் வாழுரிமை கொண்டுள்ள அல்லது அமைந்துள்ள நாட்டின் அரசாங்கத்துக்கு எழுத்திலான அறிவித்தலின் பிரதியொன்றை அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன், கிடைக்கக்கூடிய முதலாவது சந்தர்ப்பத்தில் சேர்ப்பிப்பு செய்யப்படுதல் வேண்டுமென வேண்டுகோள்விடுத்தலும் வேண்டும். (1) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆள், குழுவினர் அல்லது உருவகம் எங்குள்ளாரென அல்லது எங்குள்ளதென அறியப்படாதிருப்பின், தகுதிவாய்ந்த அதிகாரி, எழுத்திலான அறிவித்தலின் பிரதியொன்றை இயற்கை ஆள் நாட்டவராகவுள்ள, அல்லது சட்ட ஆள் அல்லது உருவகம் பதிவு செய்யப்பட்டுள்ள அல்லது குழுவினர் அமைந்துள்ள நாட்டின் அரசாங்கத்துக்கு அனுப்பிவைத்தல் வேண்டுமென்பதுடன், கிடைக்கக்கூடிய முதலாவது சந்தர்ப்பத்தில் அவ்வறிவித்தலைச் சேர்ப்பிக்கும்படி அந்நாட்டின் அரசாங்கத்துக்கு வேண்டுகோள்விடுத்தலும் வேண்டும்.

*8.* (1) பெயர்குறிக்கப்பட்டு நிரலிற் சேர்க்கப்பட்ட ஆளொருவர், ஒரு குழுவினர் அல்லது ஓர் உருவகம், தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மூலம் பெயர்குறித்தலின் இல்லாதொழிப்பை நாடலாமென்பதுடன் நிரலிலிருந்து அகற்றப்படுவதற்கும் வேண்டுகோள் விடுக்கலாம். விண்ணப்பம் எழுத்திலிருத்தல் வேண்டுமென்பதுடன், சமர்ப்பணத்துக்கு ஆதாரமான காரணங்களை எடுத்துரைத்தலும் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, பெயர்குறிக்கப்பட்ட எவரேனும் ஆளின், குழுவினரின் அல்லது ஏதேனும் உருவகத்தின் பெயர்களை நிரலிலிருந்து அகற்றும்படி அமைச்சருக்கு விதித்துரைத்தல் வேண்டும். அமைச்சரின் முடிபு இறுதியானதாதல் வேண்டும்.

(3) அமைச்சரின் முடிபினால் இன்னலுறும் எவரேனும் ஆள், குழுவினர் அல்லது ஏதேனும் உருவகம், அம்முடிபைத் தள்ளிவைப்பதனை நாடி, மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

(4) முடக்குதற் கட்டளையினால், அல்லது எவையேனும் நிதிகளை, வேறு நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார மூலவளங்களை அல்லது நிதிசார் அல்லது வேறு தொடர்புபட்ட சேவைகளைக் கிடைக்கக்கூடியனவாக்குவதற்கான தடையினால் பாதிக்கப்பட்ட எவரேனுமாள், நிவாரணத்துக்காக, மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பிக்கலாம்.

*9.* (1) நான்காம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட நிரல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் செயல்முறைக்குகந்தவரை விரைவாக, எவரேனுமாள் :-

(அ) ஏலவேயுள்ள வாடிக்கையாளரொருவர் அல்லது எந்த வாடிக்கையாளருடன் அல்லது எந்த வேறு ஆளுடன் அவர் தொழில் கொண்டு நடாத்தியுள்ளாரோ அந்த வாடிக்கையாளர் அல்லது அந்த வேறு ஆள் அல்லது அவர் அறிந்துள்ள வேறு ஆள் பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவராகவுள்ளாரென அல்லது பெயர்குறிக்கப்பட்ட ஆளொருவரின் சார்பில் செயலாற்றுகின்ற ஆளொருவராகவுள்ளாரென அவர் அறிந்திருந்தால் அல்லது சந்தேகித்தால், விடயத்துக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிவித்தல் வேண்டும் ;

(ஆ) பின்வரும் தொடர்பான தகவலை, விடயத்துக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிதிசார் உளவறிதற் கூறுக்கு வழங்குதல் வேண்டும் :-

(i) நிதிகளின் நிலைமை, முடக்குதல் நடவடிக்கைகள் மற்றும் நிதிகள் தொடர்பில் எடுக்கப்பட்ட வேறெவையேனும் நடவடிக்கைகள் ;

(ii) பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்காக, அல்லது நிறைவேற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்காக இயைபான நிறுவனத்தினால் வைத்திருக்கப்பட்ட, அல்லது பெயர்குறிக்கப்பட்ட ஆளுக்காக ஆளொருவரினால் வைத்திருக்கப்பட்ட எவையேனும் நிதிகளின், ஏனைய நிதிசார் சொத்துக்களின் மற்றும் பொருளாதார மூலவளங்களின் தன்மையும் தொகையும் அல்லது அளவும் ; அத்துடன்

(iii) இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதனை வசதிப்படுத்தும் வேறேதேனும் தகவல் ;

(இ) இத்தகவலின் ஏதேனும் சரிபார்த்தலில், விடயத்துக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகாரியுடன் அல்லது நிதிசார் உளவறிதற் கூறுடன் ஒத்துழைத்தல்.

(2) இப்பந்திக்கிணங்க வழங்கப்பட்ட அல்லது பெறப்பட்ட ஏதேனும் தகவல், அது எந்த நோக்கங்களுக்காக வழங்கப்பட்டதோ அல்லது பெறப்பட்டதோ அந்த நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும். இப்பந்திக்கிணங்கத் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அல்லது நிதிசார் உளவறிதற் கூறுக்கு வழங்கப்பட்ட ஏதேனும் தகவல், ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அல்லது வேறுவகையாக விதிக்கப்பட்ட ஏதேனும் மட்டுப்பாட்டின் மீறுகையொன்றாகக் கொள்ளப்படுதலாகாது.

*10.* தகுதிவாய்ந்த அதிகாரியும் நிதிசார் உளவறிதற் கூறும், காலத்துக்குக்குக்காலம், இவ்வொழுங்குவிதிகளின்கீழும் 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச் சட்டத்தின் கீழும் 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் கீழும் தவறுகளைப் புரிதல் தொடர்பாக, இது சம்பந்தமான அவர்களின் அல்லது அதன் பணிகளைப் பயனுற நிறைவேற்றும் நோக்கத்துக்காக, தமது அறிவுக்குட்பட்ட தகவலைப் பரிமாறலாம்.

*11.* (1) இவ்வொழுங்குவிதிகளின் 10 ஆம் ஒழுங்குவிதியில் தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குத் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஓராண்டை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியத்தண்டனைக்கு அல்லது குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகயை குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) நிதிகளை, ஏனைய நிதிசார் சொத்துக்களை மற்றும் பொருளாதார மூலவளங்களை முடக்குவதற்கான கட்டளையொன்றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற, நிதிகளைக் கிடைக்கக்கூடியனவாக்குகின்ற, அல்லது நிதிசார் சேவைகளை வழங்குகின்ற, அல்லது 5 ஆம் ஒழுங்குவிதியின் (4) ஆம் பந்தியிலும் 4 ஆம் ஒழுங்குவிதியின் (8) ஆம் பந்தியிலும் உள்ள தடையை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், மேல் நீதிமன்றத்தினால் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டு ஆண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைக்கு அல்லது ஒரு மில்லியன் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது அத்தகயை குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டுக்கும் ஆளாதலும் வேண்டும்.

12. (1) தகுதிவாய்ந்த அதிகாரி, நிதிசார் உளவறிதற் கூறு மற்றும் அமைச்சர், இவ்வொழுங்குவிதிகளின் கீழான மீறுகைக்கு அல்லது நிகழக்கூடிய மீறுகைக்கு இயைபான ஏதேனும் கருமத்தை அல்லது தகவலைத் தோதான சட்ட வலுவுறுத்தல் முகவர் நிலையங்களுக்கும், நிறுவனங்களின் விடயத்தில், நிர்வாகத் தடைகள் விதிக்கப்படவேண்டுமா அல்லவாவென்பதைத் கவனத்துக்கொள்வதற்காக அவ்வற்றின் மேற்பார்வை அதிகாரிகளுக்கும் ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரி, சட்ட வலுவுறுத்தல் முகவர் நிலையங்களுடனும், நிதிசார் உளவறிதற் கூறுடனும், மேற்பார்வை அதிகாரிகளுடனும் மற்றும் வேறு தோதான உருவகங்களுடனும் கலந்தாலோசித்தல் வேண்டுமென்பதுடன், இவ்வொழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதனைக் கண்காணிப்பதற்காகவும் அவற்றுடன் தொடர்புபட்ட தடைகளை வலுவுறுத்துவதற்காகவும் செயற்படுத்தப்படவேண்டிய திட்டமொன்றை அபிவிருத்தி செய்தலும் வேண்டும்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரி இவ்வொழுங்குவிதிகளின் கீழ் செயல்முறைகளைச் செயற்படுத்துவதற்காகவும் கடப்பாடுகளை வலுவுறுத்துவதற்காகவும் பணிப்புரைகளை வழங்கலாம்.

13. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக :-

"ஒரு சட்ட ஆளை, குழுவினரை அல்லது உருவகத்தைக் கட்டுப்படுத்துதல்" என்பது, பின்வருவனவற்றுள் எவையும் என்று பொருளாகும்.

(அ) அத்தகைய சட்ட ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் நிர்வாக, முகாமை அல்லது மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரை நியமிப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு உரிமைகொண்டிருத்தல் ;

(ஆ) நடப்பு மற்றும் முன்னைய நிதியாண்டின்போது பதவி வகித்துள்ள ஒரு சட்ட ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் நிர்வாக, முகாமை அல்லது மேற்பார்வைக் குழுக்களின் உறுப்பினர்களுள் பெரும்பான்மையோரை, ஒருவரின் வாக்களிக்கும் உரிமையைப் பிரயோகிப்பதன்விளைவாக மட்டும் நியமித்திருத்தல் ;

(இ) ஒரு சட்ட ஆளில் குழுவினரில் அல்லது உருவகத்தில் உள்ள ஏனைய பங்குதாரர்களுடனான அல்லது அவரின் அல்லது அதன் உறுப்பினர்களுடனான உடன்படிக்கையொன்றைப் பின்பற்றி, அச்சட்ட ஆளில் குழுவினரில் அல்லது உருவகத்தில் பங்குதாரர்களின் அல்லது உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமைகளின் பெரும்பான்மையைத் தனியாகக் கட்டுப்படுத்துதல் ;

(ஈ) ஒரு சட்ட ஆளுடன், குழுவினருடன் அல்லது உருவகத்துடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையொன்றை அல்லது அதன் அமைப்புப்புறவிதியில் அல்லது அமைப்பதவிதிகளில் உள்ள ஏற்பாடொன்றைப் பின்பற்றி, அச்சட்ட ஆளை, அக்குழுவினரை அல்லது அவ்வுறுவகத்தை ஆளுகின்ற சட்டம் அத்தகைய உடன்படிக்கைக்கு அல்லது ஏற்பாட்டுக்கு அது அமைந்தாகவிருப்பதனை அனுமதிக்குமிடத்து, அச்சட்ட ஆளின்மீது, அக்குழுவினரின் மீது அல்லது அவ்வுறுவகத்தின் மீது முக்கியமான செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கு உரிமைகொண்டிருத்தல் ;

(உ) விடயம் (ஈ) இல் குறிப்பீடு செய்யப்பட்ட முக்கியமான செல்வாக்கைப் பிரயோகிப்பதற்கான உரிமையைக் கொண்டிருப்பவராகவிராது, அவ்வுரிமையைப் பிரயோகிப்பதற்கான உரிமையைப் பிரயோகிப்பதற்குத் தத்துவமுடையவராகவிருத்தல் ;

(ஊ) ஒரு சட்ட ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் சொத்துக்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றின் பாகத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் ;

(எ) திரட்டிய கணக்குகளை வெளியிடும் அதேவேளையில், ஒன்றிணைந்த அடிப்படையில் ஒரு சட்ட ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் தொழிலை முகாமைசெய்தல் ;

(ஏ) ஒரு சட்ட ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் நிதிசார் பொறுப்புக்களைக் கூட்டாகவும் தனித்தனியாகவும் பகிர்தல் அல்லது அவற்றுக்கு உத்தரவாதமளித்தல் ; அல்லது

(ஐ) சட்டவிரோதமான வழிவகைகள் மூலமுட்பட, வேறுவகையில் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல்.

"நிதிசார் உளவறிதற் கூறு" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட நிதிசார் உளவறிதற் கூறு என்று பொருளாகும் ;

"நிதிசார் சேவைகள்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தில் வரைவிலக்கணங் கூறப்பட்டவாறு "நிதித்தொழில்" என்னும் சொல்லமைப்பின் கருத்துக்குட்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுதல் என்று பொருளாகும் ;

"நிதிகள், ஏனைய நிதிசார் சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலவளங்கள்" என்பது, எவ்வாறாயினும் பெறப்பட்ட உருவ அல்லது அருவ, அசைவுள்ள அல்லது அசைவற்ற ஒவ்வொரு வகையினவையுமான சொத்துக்களையும், வங்கி வரவுகள், பயணிகளின் காசோலைகள், வங்கிக் காசோலைகள், பணக் கட்டளைகள், பங்குகள், பிணையங்கள், முறிகள், வரைவுகளும் கடன் பத்திரங்களும் என்பனவுட்பட, ஆனால் அவற்றுக்கு வரையறுக்கப்படாமல், அத்தகைய சொத்துக்களுக்கான உரித்துக்கு, அல்லது அவற்றிலான அக்கறைக்குச் சான்றளிக்கின்ற, இலத்திரனியல் அல்லது டிஜிட்டல் உட்பட்ட எப்படிவத்திலுமான சட்ட ஆவணங்கள் அல்லது சாதனங்கள் என்பவற்றை உள்ளடக்குதல் வேண்டுமென்பதுடன், பின்வருவனவற்றையும் உள்ளடக்கும் :-

(i) அத்தகைய நிதிகளிலிருந்து, சொத்துக்களிலிருந்து அல்லது பொருளாதார மூலவளங்களிலிருந்து பெறப்பட்ட அல்லது தோற்றுவிக்கப்பட்ட எல்லா நிதிகளும் ;

(ii) நேரடியாகவல்லாமல் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட நிதிகள், சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்கள் ; அத்துடன்

(iii) கூட்டாகச் சொந்தமாகவைத்திருக்கப்பட்ட அல்லது கட்டுப்படுத்தப்பட்ட நிதிகள், சொத்துக்கள் அல்லது பொருளாதார மூலவளங்கள் ;

"மேல் நீதிமன்றம்' என்பது, அரசியலமைப்பின் 154ஔ என்னும் உறுப்புரையின் கீழ் தாபிக்கப்பட்ட கொழும்பில் நடைபெறும் மேல் மாகாணத்துக்கான மேல் நீதிமன்றம் என்று பொருளாகும் ;

"நிறுவனம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும் ;

"அமைச்சர்" என்பது, அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் கீழ் எந்த அமைச்சருக்கு வெளிநாட்டலுவல்கள் என்ற விடயம் குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சர் என்று பொருளாகும் ;

"ஒரு சட்ட ஆளை, குழுவினரை அல்லது உருவகத்தைச் சொந்தமாக வைத்திருத்தல்" என்பது, ஒரு சட்ட ஆளின், குழுவினரின் அல்லது உருவகத்தின் உரிமையாண்மை உரிமைகளின் ஐம்பது சதவீதத்தை அல்லது அதற்கு மேற்பட்டதை உடைமை கொண்டிருத்தல், அல்லது அதன்கண் பெரும்பான்மை அக்கறையைக் கொண்டிருத்தல் என்று பொருளாகும் ;

"பயங்கரவாதச் செயல்" என்பது, 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்.

6 - 50

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.